• மாத இதழ் • 80 காசு


# சுடர்

91

செப். '88




FREE E - BOOKS , www.thamizham.net.,



# தேர்தல் எப்போது ?

தெருவெங்கும் தேர்தல் ஜோசியம்! எப்போது தேர்தல் வருமென்றும், யார் ஜெயிப்பவர்கள் என்றும் எல்லோரும் ஜோசியம் சொல்கின்றனர்.

மத்திய புலனாய்வுத்துறை கொடுத்துள்ள விவரமும், கம்ப்யூட்டரின் தேர்தல் முடிவு பற்றிய ஆய்வுகளும் காங்கிரஸ் கட்சிக்குச் சாதகமாயில்லை என்பது தான் கவர்னர் ஆட்சி நீட்டிப்புக்குக் காரணம் என்று பொதுவான அபிப்பிராயம் உள்ளது.

இது உண்மையானால், எத்தனை வருடத்திற்குத் தேர்தலை ஆளும் கட்சி தள்ளி வைக்க முடியும்? 'கவர்னர் ஆட்சி அமுல்படுத்தப்பட்ட பிறகு, ஒரு முறைதான் அதை நீட்டிக்க முடியும்,' என்று கூறுகிறது இந்திய அரசியல் சட்டத்தின் 58ஆம் திருத்தம். ஆக 1989 ஜனவரி 28 ஆம் தேதிக்குள் தேர்தலை நடத்த வேண்டிய கட்டாயம் உள்ளது போலத் தோன்றும்!

ஆனாலும், அதே சட்டத்திருத்தத்தின் இரண்டு உட்பிரிவுகளை நாம் மறந்துவிடக் கூடாது. (1) அந்நிய நாட்டுடன் நடைபெறும் போர் காரணமாகவோ (2) உள்நாட்டுக் கலவரம் காரணமாகவோ, தேர்தலை மீண்டும் மீண்டும் தள்ளி வைக்க அந்த உட்பிரிவுகள் வகை செய்கின்றன.

இப்போது வெளிநாட்டுடன் போரோ, உள்நாட்டுக் கலவரமோ இல்லையே என்று நாம் வாதிடலாம். அரசாங்கம் நினைத்தால், இரண்டையுமே ஏற்படுத்தி விடுவது பெரிய காரியமில்லை.

இலங்கையில் விடுதலைப் புலிகளைத் தேடும் வேட்டை தீவிரமாக்கப்பட்டுள்ளது. வன்னியர் பிரச்சினை இருக்கவே இருக்கிறது. எதை வேண்டுமானாலும் அரசாங்கம் காரணம் காட்டும்.

ஒரு முக்கியமான பின் குறிப்பு: அரசியல்வாதிகள் உள்ளே நுழையவே கூடாது என்று ஆர்ப்பாட்டம் செய்யும் வன்னியர் சங்கத்தினர், 22, 23-8-88 தேதிகளில், ஜெயம்கொண்டம், உடையார்பாளையம் பகுதிகளில், மூப்பானாரை வரவேற்றுள்ளனர். காங்கிரஸ் கட்சிக் கூட்டம் நடந்துள்ளது. புரிகிறதா?

— உலகப்பன்

FREE E-BOOKS , www.thamizham.net.,



பன்முக மனிதர்கள் :

# குமரி அனந்தன்

“கொடி பிடிக்கும் தொண்டன் முடிவெடுப்பான்” என்னும் முழக்கத்தோடு, காந்தி காமராஜ் தேசியக் காங்கிரஸ் கட்சியைக் குமரி அனந்தன் தொடக்கிய போது, சாரி சாரியாய்ச் சென்னை நோக்கி வந்த லோரிகளையும், தொண்டர்களையும் பார்த்து விட்டு, “எதிர்காலத்தில், காமராஜ் விட்டுச் சென்ற இடத்தைத் தமிழ் நாட்டில் இவர்தான் பிடிக்கப் போகிறார்' என்று நம்பியவர்கள் உண்டு! அந்த நம்பிக்கையைத் தூள் தூளாக்கி விட்ட பெருமை அனந்தனுக்கு உண்டு.

அண்மையில் ராஜீவ் காந்தி சென்னை வந்த போது, விமான நிலையத்தில், கையில் ஒரு மாலையை வைத்துக் கொண்டு பத்தோடு பதினொன்றாய், ஓர் ஓரத்தில் நின்ற காட்சிதான், இலக்கியச் செல்வரின் இன்றைய நிலை! தலைவர்களோடு ஒருவராய் நின்று மாலை போடக்கூட, காங்கிரஸ் கட்சி இவரை அனுமதிக்கவில்லை போலும்! எல்லோரும் தொண்டராய் இருந்து கொஞ்சம் கொஞ்சமாய் முன்னேறித் தலைவர் ஆவார்கள். இவரோ, தலைவராய் இருந்து கொஞ்சம் கொஞ்சமாய்ப் பின்னிறங்கி தொண்டர் ஆகியிருக்கிறார்.

அதே மாதிரி நம் நாட்டில் நடிகர்கள் பலர் அரசியல்வாதிகளாக (Actor turned Politician) மாறியுள்ளனர். இவரோ, அரசியல்வாதியாக இருந்து அண்மையில் நடிகராக (Politician turned actor) மாறியுள்ளார். ‘காக்கும் கை’ நாடகத்தின் நடிகராக நம் குமரி அனந்தன் புதிய பரிணாமம் பெற்றுள்ளார்.


இந்திரா காந்தி ஆட்சியிலிருந்த போது, சென்னை தலைமை அஞ்சல் நிலையம் முன்பு, ஈழத்தமிழருக்கு ஆதரவாக, இவர் இந்திராவின் கொடும்பாவியைக் கொளுத்தினார். பிறகு, நெடுமாறன் நடத்திய மதுரை-இலங்கை தியாகப் பயணத்தில் திடீரெனக் கலந்துக் கொண்டு, படகில் ஏறினார். எல்லா ‘ஸ்டண்ட்’ காட்சியும் முடிந்து விட்டது. இப்போது ‘தமிழர் ரத்தம் தண்ணீரல்ல’ என்பதை மறந்து விட்டு, ஈழத்தமிழருக்கு எதிராய்க் குரல் கொடுக்கிறார்.

தலைகீழ்ப் பரிணாமமே - உன் பெயர் குமரி அனந்தனோ ?

— **கோபக்காரன்**

FREE E - BOOKS , www.thamizham.net.,

# இன்னொரு தீண்டாமை



கற்பு, தாய்மை, பெண்மை போன்ற சொற்களை மிதமிஞ்சிப் பயன்படுத்தும் பூமி தமிழகம் தான். இந்தச்சொற்களைப் படு மூர்க்கமாக கொச்சைப்படுத்துவதும் தமிழ் மக்கள்தாம்.

அண்மையில் பல்லவன் பேருந்தில் ஒரு நிகழ்ச்சி: வட இந்தியர் ஒருவர் அப்பாவித்தனாக, காலியாக இருந்த பெண்கள் இருக்கையில், ஒரு நடுத்தர வயதைத் தாண்டிய மாதின் அருகே அமர்ந்து விட்டார். தமிழகம் தவிர வேறெங்கும் பெண்களுக்குத் தனி இருக்கை கிடையாது. தமிழ்ப் படிக்கத் தெரியாத அந்த வட இந்தியர் யதார்த்தமாகக் காலியிடத்தில் உட்கார்ந்தவுடன், நாகப்பாம்பென அந்தப்பெண் மணி சீறினார். பேருந்தில் இருந்த பிற ஆண்களும், அந்த நபர் ஏதோ பிக்பாக்கெட் அடித்து விட்டதைப் போல அவர் மேல் பாய்ந்தனர். என்ன தவறு செய்து விட்டோம் என்று கூடப் புரியாமல் அவர் பாவம் விழித்தார். பேருந்துக்கு வெளியே தெரியும் சுவரெங்கும் ஆணும் பெண்ணும் கட்டிப்பிடித்துக் கூத்தடிக்கும் சுவரொட்டிகள் ஆபாச நாற்றமடிக்கையில் இப்படியொரு போலித்தனமான ஒழுக்கத்தை இங்கு அவர் எதிர்பார்த்திருக்க மாட்டார்.

இப்படியொரு தீண்டாமை நிலவியும் இங்குப் பாலியல் குற்றங்கள் மிகுந்து பெண்களுக்குப் பாதுகாப்பில்லாத நிலையே உள்ளது. உண்மையில் ஆணையும், பெண்ணையும் நெருப்பும் பஞ்சுமாக ஒதுக்கிப்பார்ப்பதால் தான் பாலியல் குற்றங்கள் பாலூற்றி வளர்க்கப்படுகின்றன. அந்நிய பெண் என்றால் ஆணுக்குப் போதை! அந்நிய ஆண் என்றால் பெண்ணுக்கு மிரட்சி! மற்றபடி தாய்மை, கற்பு என்பதெல்லாம் இங்கு நடைமுறை பொய்களே! மனது நிறைய சினிமா கதாநாயகனைச் சேவித்துக் கொண்டிருக்கும் ஒரு பெண், கூட்டத்தில் ஓர் ஆணின் சட்டை நுனி பட்டு விடுவதால் தன் கற்பே கெட்டுவிட்டதாக ஓலமிடும் போலித்தனத்திற்குப் பெயரா கற்பு? மரத்துக்குச் சேலை கட்டினால் கூட வேடிக்கை பார்க்கும் ஆண்களுக்குத் தாய்மை பற்றி என்ன புரியும்?

ஆணும் பெண்ணும் விரோதமானவர்கள் இல்லை. தாய், மகன், சகோதரன், சகோதரி, தோழன், தோழி தந்தை, மகள் போன்ற நிலையில் இருபாலோரின் உறவுகளை நாம் பார்க்கத் திராணியற்று விட்டோமா? இந்த மன ஆரோக்கியம் தமிழர்களுக்கு எப்போது வரும்?

— ஸ்டெனிஸ்லாஸ்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# கடவுளின் பெயரால்...



நம்மையெல்லாம் 21-ஆம் நூற்றாண்டுக்கு அழைத்துச் செல்ல எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொண்டிருப்பதாக அடிக்கடி நம் இளைய பிரதமர் கூறுகின்றார். ஆனால், கடவுள், சமயங்களின் பெயரால் ஏற்படுத்தப்பட்டுள்ள பல மூட நம்பிக்கைகள் நம் மக்களை 19, 18-ஆம் நூற்றாண்டுகளுக்கு அழைத்துச் செல்கின்றன.

பீகார், ஒரிஸா, உ. பி. முதலான பின் தங்கிய மாநிலங்களில் மட்டுமல்ல, கேரளம், மே. வங்கம் முதலான படித்த மக்கள் நிரம்பிய மாநிலங்களில் கூட மூட நம்பிக்கை தலை விரித்தாடுகிறது.

கேரளாவில் உள்ள 'தூக்கம்' என்னும் கிராமத்தில் வருடந்தோறும் எடுக்கப்படும் விழாவிற்கு ஆயிரக் கணக்கில் மக்கள் கூடுகின்றனர். அங்கே, முதுகில் உள்ள தோலில் கம்பி வளையங்கள் குத்தப்பட்டு மிக உயரத்தில், பறவைகளைப் போல, கைகளையும் கால்களையும் விரித்துக் கொண்டு, பக்தர்கள் தொங்குகின்றனர். கம்பி வளையம் குத்திக் கிழிந்து, தோல் அறுந்து போனால், அவ்வளவு உயரத்திலிருந்து கீழே விழுந்து உயிரை விடுவதைத் தவிர வேறு வழியில்லை.

இந்நிகழ்ச்சியில் ஒரு வேதனையான விஷயமும் உள்ளது. உயிரையும் பொருட்படுத்தாது, அந்தரத்தில் தொங்கும் பலர் பக்தியின் காரணமாகச் செய்வதில்லை. பணத்திற்காகவே செய்கின்றனர். ஆம்! அந்தரத்தில் பறவைபோல் தொங்குவதாய்ப் பிரார்த்தனை செய்து கொள்ளும் பக்தர்கள் பலரால் அப்படிச் செய்ய முடிவதில்லை. ஆகவே, அவர்களுக்குப் பதிலாக ரூ. 2000/- அல்லது ரூ. 2500/- பெற்றுக் கொண்டு, இந்த வித்தையைச் சிலர் செய்து வருகின்றனர். சர்க்கஸைப் போல, ஆயிரக் கணக்கில் மக்கள் சுற்றி நின்று வேடிக்கை பார்க்கின்றனர்.

1863 ஆம் வருடம், கடவுளின் பெயரால் நடக்கும் இத்தகைய சுய சித்திரவதைகளைத் தடுக்க, வெள்ளைக்காரன் ஒரு சட்டம் கொண்டு வந்தான். நம் சுதந்திர இந்தியா அந்தச் சட்டத்தையும் வெள்ளையனோடு சேர்த்து வெளியேற்றி விட்டதோ?

கறுப்புச் சட்டை

FREE E - BOOKS , www.thamizham.net.,

# உடம்பும் ஒரு பாஷைதானே

[இப்பகுதிக்கு வந்துள்ள கடிதங்கள் யாவும், பிரபஞ்சனின் கருத்தை மிகக் கடுமையாக விமர்சனம் செய்துள்ளன. எனினும் பரிசுபெறும் வகையில், எல்லாக் கோணங்களிலும் இப்பிரச்சினையை அலசிய கடிதம் எதுவும் இல்லை ஆகவே, வந்துள்ள கடிதங்களிலிருந்து நான்கு கடிதங்களின் சில பகுதிகள் கீழே தரப்படுகின்றன ]

**வசீகரன், சென்னை-4.** ஆழ்ந்து பரிசீலனை செய்தால் பிரபஞ்சன் சிகரத்தில் அல்ல பள்ளத்தில் கிடப்பது தெரியும். Free Sex புராதனச் சமூகத்தின் குணாம்சம். 'ஒருவனுக்கு ஒருத்தி' என்பதில் சொத்துரிமை, இன்ன பிற வர்க்க சதிகள் எது இருந்தாலும், நிகழ்காலம் கடந்த காலத்தை விடவும் மேன்மையானதே. Free Sex அதிகம் நிலவுகிற அமெரிக்கா போன்ற மேலை நாடுகளின் தீர்க்க முடியாத கலாச்சாரச் சிக்கல்கள் நாம் அறியாததல்ல. அங்கே தற்கொலைகள் அதிகம். வன்முறைக் குற்றங்கள் அதிகம், மூட்டைப் பூச்சிக்குப் பயந்து வீட்டை எரித்து விடக் கூடாது.

**'கிளி' குலசேகரம்-629 161** 'எய்ட்ஸ்' போன்ற பாலுணர்ச்சி நோய்கள் பரவவும், அதனால் தவறு செய்யாதவர்களும் பாதிக்கப்படுவதும் கொடுமை. எதையுமே, முற்போக்குப் பார்வை, நாகரிகம் என்ற போர்வையில் மலினப்படுத்தாமல் இருக்க வேண்டும். எதுவுமே வெட்ட வெளிச்சமாக்கப்படும் போது மதிப்பிழந்து விடுகிறது.


**அன்புராஜ், சோழபுரம் - -623 557 :** தயவு செய்து மன்னிக்க வேண்டும் பிரபஞ்சன் அவர்களே ! உங்களுக்கு ஒரு மகள் இருந்து, அவள் தன் காதலனுடன் உடம்பால் அவனை அறிந்து கொண்டு, 'அப்பா, நானும் அவரும், தாங்கள் எழுதியபடியே நடந்து கொள்கிறோம், என்று சொல்கிறாள் என்று வைத்துக் கொள்வோம்...... அப்போது தங்கள் மனம் படும் பாடு எப்படி இருக்கும் ?

**கவிஞர் மணிமொழி, பொள்ளாச்சி-2 ;** உயர்திணை. அஃறிணை என்ற வழக்கினைக் கற்றும் 'விலங்குடம்பும் ஒரு பாஷைதானே ? என்று வினாவிக் கொண்டு விலங்கோடும் உடலறவு கொள்ளும் ஒரு புது அறிவியலை வளர்ப்பாரோ பிரபஞ்சன் ?

(விவாதத்தில் கலந்து கொண்ட வாசகர்கள் அனைவருக்கும் நன்றி. எல்லாவற்றையும் வெளியிட மனமிருந்தும், இடமில்லையே)

FREE E - BOOKS , www.thamizham.net.,

# தூரத்து நெருக்கம்



*நகரத்து வாழ்க்கையில் மனித உறவுகள் மிகவும் அந்நியப் பட்டு வருகின்றன. யாரும் யாரையும் பற்றிக் கவலைப் பட நேரமில்லாத சுயநலமே வாழ்க்கை முறையாகிவிட்ட அவலத்தை இந்த நிகழ்ச்சி சுட்டிக்காட்டுகிறது:*

இரண்டு பேர் பம்பாய்க்கு ஒரு இன்டர்வியூ விற்குப் போனார்கள். மற்றவர்களுடன் வரிசையில் இவர்களும் அருகருகே அமர்ந்து கொண்டார்கள்.

✳ நீங்கள் தமிழ்நாடா ?

✳ ஆமாம் !

✳ நானும் தான் ! எந்த ஊர் ?

✳ மதறாஸ் !

✳ நானும்தான் ! மதறாஸில் எங்கே ?

✳ மைலாப்பூர் !

✳ அட, நானும் மைலாப்பூர் தாங்க ! எந்தத் தெரு !

✳ அப்பு முதலித் தெரு !

✳ என்னங்க இது ! நானும் அந்தத் தெரு தாங்க ! வீட்டு நெம்பர் என்னங்க ?

✳ 96-A ங்க !

✳ அட, நான் 96-B ங்க

✳ அப்படியா ? கிளாட் டு மீட் யூ !

— ஜி. வில்சன் அமல்ராஜ்

FREE E - BOOKS , www.thamizham.net.,



# கல்பாக்கங்களின் இரகசியம்

மக்களின் போர்க்குரல், பத்திரிகைகளின் எதிர்ப்பு எல்லாவற்றையும் மீறி, அணு உலைகளைத் திறந்தே தீருவோம் என்று பிடிவாதம் பிடிக்கிறது மத்திய அரசு!

"கல்பாக்கம் அணுமின் நிலையத்தை மூட வேண்டும்" என்று குரல் கொடுத்தால், அதே ஊரில் இன்னும் ஒரு மின் நிலையத்தை அமைக்க அரசு திட்டமிடுகிறது. மேலும் நெல்லை மாவட்டத்தில் காடங்குளம், கர்நாடகத்தில் கைகா, குஜராத்தில் காரக்பூர், உத்திரபிரதேசத்தில் நரோரா ஆகிய இடங்களிலும் புதிய அணு மின் நிலையங்களைக் கட்டும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது.

மின்சாரத்தின் தேவை கருதியே அணு உலைகளை அமைப்பதாக அரசு கூறுகிறது. அபாயகரமான அணுமின் நிலையங்கள் மூலம் நமக்குக் கிடைக்கும் மின்சாரம் சில மில்லியன் யூனிட்டுகளே! அறிவியல் தெரிந்தவர்களுக்கு உண்மை விளங்கும். அணு குண்டு தயாரிப்பதற்கு 'புளுட்டோனியம்' தேவை. அந்தப் புளுட்டோனியம், அணு உலைகளின் 'கழிவுப்' பொருளாகக் கிடைக்கிறது. ஆகவேதான், அரசாங்கம் அணுமின்நிலையம் தொடங்குவதில் அவ்வளவு ஆர்வம் காட்டுகிறது.

உலக நாடுகள் அணு நிலையங்களின் ஆபத்தை உணர்ந்து, அணு உலைகளை மூடத் தொடங்கி விட்டன. உலக நாடுகளின் விஞ்ஞானிகளும், கலைஞர்களும் அணுமின் நிலையங்களைக் கடுமையாக எதிர்க்கின்றனர். இந்தியாவில் மட்டும்தான் எம். ஆர். சீனிவாசன் போன்ற விஞ்ஞானிகள் ஆதரிக்கின்றனர். கலைஞர்கள் மௌனம் சாதிக்கின்றனர்.

ரஷ்யாவின் திறந்தவெளிக் கொள்கையால் (Glasnost) அண்மையில் ஒரு செய்தி வெளிவந்துள்ளது. ரஷ்ய நாட்டு செர்னோபில் (CHERNOBYL) அணு உலையை வடிவமைத்த விஞ்ஞானி, குற்ற உணர்வு காரணமாகத் தற்கொலை செய்து கொண்டுள்ளாராம். இதைத் தொடர்ந்து செர்னோபில், மின்ஸ்க், கிராஸ்நாடார் ஒடெஸ்ஸா நகர அணு உலைகள் மூடப்பட்டுள்ளன

ஆனாலும் ஒரு வேதனை! அணு உலைகளின் ஆபத்தை உணர்ந்து அவைகளை மூடிவரும் சோவியத் நாடு, இந்தியாவில் மட்டும் புது அணு உலைகளைத் திறக்க உதவி வருகின்றது?

இது எந்த வகையில் நியாயம்? இது என்ன சகோதரத்துவம்?

— பழநி

FREE E - BOOKS , www.thamizham.net.,

நாம் அறிய வேண்டியவர்கள் :

# எம்.என். ராய்

## (1887 - 1954)



❁ "இருபதாம் நூற்றாண்டின் மிகப் பெரிய அறிவு ஜீவிகளில் ராயும் ஒருவர்" என்று விஞ்ஞானி ஐன்ஸ்டினால் புகழப்பட்ட இவரை இன்னும் இந்தியா சரியாக உணரவில்லை.

❁ இளம் வயதிலேயே லெனினுடையவும், ஸ்டாலினுடையவும் கவனிப்புக்கு ராய் ஆளானார். லெனினுக்கு இவர் மேல் வியப்புக்கலந்த மதிப்பே இருந்தது. 'வெண் தாடியுடன் கிழக்கேயிருந்து தோன்றும் தேவ புருஷனின் உருவத்தைத்தான் நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். ஆனால் நீங்களோ இவ்வளவு இளைஞராக இருக்கிறீர்களே' என்றாராம் லெனின்.

❁ கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது மாநாட்டில், தான் முன் வைத்த ஆய்வுக் கட்டுரையைப் பார்க்கிலும் ராயினுடையது சில அம்சங்களில் மேலாக இருப்பதை லெனின் வெளிப்படையாக ஏற்றுக் கொண்டார். தன் கட்டுரைக்கு அனுபந்தமாக ராயின் கட்டுரையை இணைக்க வேண்டினார்.

❁ பரிபூரண சுயராஜ்ஜியம் என்ற தீர்மானத்தை மௌலானா ஹஸரத் மொகான் 1921 இல் கொண்டு வந்தார் என்றாலும், அதன் பின்னால் நின்று செயல்பட்டவர் ராய் தான்.


❁ ராய்க்கு 17 மொழிகள் தெரியும். இவர் ஒரு கணித மேதையும் கூட. 15 ஆண்டுகள் பல வெளிநாடுகளில் தங்கியிருக்கிறார். இளைஞனாக இருந்த போதே, தொலைதூர மெக்சிகோவில், ரஷ்யாவுக்கு வெளியே முதல் கம்யூனிஸ்ட் கட்சியை நிறுவினவர் இவரே, அங்கு ஸ்பானிய மொழியில் பத்திரிக்கையும் நடத்தினார். இவரது சாதனைகளைக் கண்டு "கட்டித் தங்கம்" என்று ஸ்டாலின் புகழ்ந்தார்.

❁ ஐரோப்பிய புரட்சிகளுக்கு லெனினின் எழுத்துகள் தூண்டுகோலாக அமைந்தது போல, ஆசியப் புரட்சிகளுக்கு ராயின் எழுத்துக்கள் தூண்டு சக்தியாயின. சீனாவிலிருந்த காலங்களில் பல தடவை மாசேதுங், சூயென்லாய் போன்ற தலைவர்களுக்கு ராய் அறிவுரைகளும் விமர்சனங்களும் அளித்திருக்கிறார்.

❁ இந்தியாவின் முதல் கம்யூனிஸ்டு என்று இவரைக் குறிப்பிடுவர். நடைமுறையில் கம்யூனிசம் வந்த போது வெளிப்பட்ட ஊனங்களை நிவர்த்தி செய்ய முயன்றார். இவையே 'புதிய மனித நேயம்' என்ற தத்துவத்திற்கு இவரை இட்டுச் சென்றன.

**செய்தி : காலச்சுவடு**

FREE E - BOOKS , www.thamizham.net.,



# பத்திரிக்கை தர்மம்

கொழுத்ததொரு பணப்பெட்டிக்குப்
பேனாவை அடகுவை,
விளம்பரம், அட்டை, நடுப்பக்கம்
யாவிலும் பெண்கள்
ஆடைகள் இல்லாதிருப்பது
அதிகம் லாபம் தரும்
இரவு......இன்பம்
இத்யாதி தலைப்புகளில்
சாக்கடைகளைப் பரிமாறும்
சரக்கு மாஸ்டர்களை
அமர்த்திக் கொள்
நிஜக்கதை என்றும்
தலைப்பிடலாம் ! கொஞ்சம் வசதி!
மிச்ச இடங்களை
அரசாங்கப் புகழ் பாடி
அடைத்து விடலாம் !
ஆச்சு !
ஐந்து லட்சம் பிரதிகள்
அனாயசமாய் விற்று விடும்.
அப்புறமென்ன ?
மூத்த தமிழ்க்குடியை
முன்னேற்றியதாக நீயும்
சுயசரிதை எழுதுகையில்
சொல்லிக் கொள்ளலாம், போ !

— இரவிக்குமார்

("இதனால் யாவருக்கும்" என்ற நூலிலிருந்து)

FREE E - BOOKS , www.thamizham.net.,

தென்கிழக்கு ஆசியா .

# லாவோஸ்



○ சீனா, வியட்நாம், கம்பூச்சியா, தாய்லாந்து, பர்மா ஆகிய 5 நாடுகளால் சூழப்பட்டது லாவோஸ் தன்னைவிட ஆற்றல்மிகு அந்நிய சக்திகளை எதிர்க்கப் போதுமான மக்கட் பெருக்கமோ, பொருளாதார வளமோ லாவோசுக்கு இல்லை. எனவே அந்நிய சக்திகளாலேயே இதன் தலைவிதி நிர்ணயிக்கப்பட்டு வந்துள்ளது. இம்மக்கள் சமய, மொழி, பழக்க வழக்கங்களால் பிளவுபட்டிருப்பதும் அந்நியர் தலையீட்டிற்கு வசதியானது.

○ இதன் 2, 36, 800 ச.கி. மீட்டர்களில் சுமார் 39 லட்சம் மக்களே வாழ்கின்றனர். சராசரி தனி நபர் ஆண்டு வருவாய் 80 டாலர் (இந்தியா 217 டாலர்) சராசரி ஆயுள், ஆண்; 42, பெண் ;45 [இந்தியா: 52,53] மலேரியாவால்தான் இங்கு மக்கள் மிகுதியாக மடிகின்றனர். தனி நபர் தினசரி உணவு: 2090 கலோரிகளே [இந்தியா : 2115 கலோரி] எனவே இது நம்மை விட ஏழ்மையான பரிதாபத்திற்குரிய நாடாகும்.

○ இம்மக்கள் தாய்லாந்து மக்களின் வழியினர். சென்ற நூற்றாண்டில் தாய்லாந்தின் 'கட்டுப்பாட்டிலும், இந்நூற்றாண்டில் பிரான்சின் கட்டுப்பாட்டிலும் இந்நாடு தன்னை இழந்தது. ஜெனிவா ஒப்பந்தத்தின் விளைவாக 1954இல் லாவோஸ் பிரான்சிடமிருந்து விடுதலை பெற்றது.

○ 1975 இறுதி வரை இங்கு நிலவியது வரையறுக்கப்பட்ட முடியாட்சிதான். ஆனாலும் 1963க்குபின் வியட்நாமில் ஏற்பட்ட மக்கள் போராட்டம், லாவோசையும் புரட்சிகரமான பாதையில் செலுத்தியது. 1950லேயே பிரஞ்சு ஆதிக்கத்தை எதிர்த்துத் தொடங்கப்பட்ட பாதட் லாவோ என்ற இயக்கம் வியட்நாமின், வியட்மிங் புரட்சிப்படைகளுடன் இணைந்து செயல்பட்டு வந்தது. 1975இல் நாட்டின் முழுக்கட்டுப்பாட்டையே கைப்பற்றியது; மன்னர்ஆட்சி மடிந்து வீழ்ந்தது. இதன் பின் பாதட்லாவோ இயக்கத்திடமிருந்து கம்யூனிஸ்டு கட்சியின் கைக்கு ஆட்சி மாற்றப்பட்டது.

○ இதன் பிறகு அமெரிக்க உதவிகள் நிறுத்தப்பட்டன; கொடிய பஞ்சமும் சேர்ந்து கொண்டது; அரசினரின் போக்கும் கடுமையாக இருந்தது, பொருளாதாரமும் நிலை குலைந்து போனது. 3 லட்சம் மககள் வறுமையால் நாட்டை விட்டே ஓடினர்.

○ 1980 இல் பொதுவுடமை அரசு தன் சர்வாதிகாரப் போக்கைத் தளர்த்தியது. சோவியத், வியட்நாம் உதவிகள் பெறப்பட்டு பொருளாதாரம் ஓரளவு சீரானது எனினும் வானத்தையே நம்பும் இந்நாட்டில் மழையிருந்தால் தான் நெல் விளையும். வறட்சி அல்லது வெள்ளம் எனில் நெல் உற்பத்தியே இராது. அரசு கஜானாவையே காலியாக்கித்தான் அயல்நாடுகளிலிருந்து அரிசி வாங்கமுடியும். இதனால் அனைத்துப் பொருளாதாரத் திட்டங்களும் நின்று போகும்.

○ தலைநகர் பழம்பெரும் நகரான வியன்டியானே - தாய்லாந்து எல்லையில் உள்ளது. பெரும்பாலான மக்கள் மீகாங் நதி பள்ளத்தாக்கில் மட்டுமே வாழ்கிறார்கள். 45% மக்கள் லாவோ இனத்தவர். லாவோ மொழி பேசும் பௌத்தர்களே மிகுதி. தற்போதைய குடியரசு தலைவர் : பௌபிவாங் விசிட், பிரதமர் : கோசோன் பாம்விகேன்.

○ இவர்களின் கலாச்சார வாழ்வை 14ஆம் நூற்றாண்டில் நுழைந்த பௌத்தமும், இந்து சமயமும் பெரிதும் பாதித்தன. லாவோசின் கோயில் சிற்பங்களிலும் இந்திய புராண இதிகாசங்களே கருப்பொருட்களாக அமைந்துள்ளன.

○ இம்மக்கள் ரயில் வண்டியைக் கண்டதேஇல்லை; ரயில் போக்குவரத்தே அமைகக்ப்படவில்லை. சாலைப் போக்குவரத்தும் மிகவும்பின் தங்கிய நிலையில் உள்ளது. தன் கால்களில்நிற்கத் தொடங்கியுள்ள லாவோஸ் திருந்திய பொதுவுடைமைஆட்சியில் விரைவில் தன்னிறைவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது

(அடுத்து : இந்தோனேசியா) — உலகப்பன்

FREE E - BOOKS , www.thamizham.net.,



# மூப்பனார்களைக் காப்பாற்றும் சட்டம்

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஓர் அதிகாலையில் கும்பகோணத்திற்குப் பக்கத்தில் நல்லூர் கிராத்தில், கம்யூனிஸ்ட்டு (CPI) கட்சியைச் சேர்ந்த 600 தொண்டர்கள், ஏறத்தாழ 4 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தில் இறங்கி, விவசாய வேலைகளைத் தொடங்கினர். அந்த நிலம், தமிழ் நாடு காங்கிரஸ் கட்சியின்தலைவர். ஜி. கருப்பையா மூப்பானரின் பினாமி பெயரில் இருந்தது.ஒரே வாரத்தில், போலீஸ் துணையோடு, மூப்பனாரின் ஆட்கள் அந்த நிலத்தை மீட்டு விட்டனர். 1986 செம்டம்பர், அக்டோபர் மாதங்களில் இந்த நிகழ்ச்சி நடை பெற்றது


பினாமிகளின் பெயர்களில் உள்ள நிலங்கள் தவிர, மூப்பனார் குடும்பத்தினரின் பெயரில் உள்ள நிலங்க்ள்மட்டுமே பல ஆயிரம் ஏக்கர்களாகும்.அப்படியானால், 1961 ஆம் வருடத் தமிழ்நாடு நில உச்ச வரம்புச் சட்டம் என்ன தான் செய்து கொண்டிருக்கிறது.

மேற்கூறப்பட்டுள்ள சட்டம் அமுலுக்கு வருவதற்கு முந்திய சில ஆண்டுகளில், தமிழ்நாடு முழுவதிலும் நிலங்கள் விற்பனையாகவும், அன்பளிப்பாகவும் வேறு வகையாகவும், பெயர் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இந்நிலை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டபோது. 1980 ஆம் ஆண்டு, தமிழக அரசு, சட்டசபையில் ஒருபில்லைக் கொண்டு வந்தது (Bill 26 of 1980). அப்போது வருவாய்த்துறை அமைச்சராக இருந்த எஸ்.டி.எஸ். கொண்டு வந்ததில், "1—1—1958 ஆம் தேதிக்கும் 6—4—1960 ஆம் தேதிக்கும் இடைப்பட்ட காலத்தில்நடைபெற்ற நில விற்பனை, அன்பளிப்புஎதுவும் சட்டப்படி செல்லுபடியாகாது" என்று கூறுகின்றது. மேற்கண்ட காலத்தில் நடைபெற்ற நில மாற்றம் அனைத்தும், வெறும் பினாமி விஷயமே என்று அரசுக்குத் தகவல் கிடைத்திருப்பதால் தான், இச்சட்டம் கொண்டு வரப்படுவதாக்வும் அமைச்சர் கூறியுள்ளார்.

இந்த 'பில்' தமிழகச் சட்ட மன்றத்தில் நிறைவேற்றப்பட்டு,மத்திய அரசின் ஒப்புதலுக்காக டெல்லிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால், இன்று வரை அது திரும்பி வரவில்லை. என்ன காரணம் ?

1958-60 ஆம் ஆண்டுகளில்தான் மூப்பனார் குடும்பத்தின் நிலங்கள் பெரும்பகுதி விற்பனை செய்யப்பட்டுள்ளன. இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி (11-1-87) பத்திரிகைக்குக் கொடுத்துள்ள பேட்டியில், மூப்பனாரும் இதை ஒப்புக் கொண்டுள்ளார். அப்பேட்டியின் ஒரு பகுதி ;—

FREE E - BOOKS ; www.thamizham.net.,



# மூப்பனார் பேட்டி

“ 1956 ஆண்டு முதல், ஏராளமான உங்கள் சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக, நிலப் பதிவு ஆவணங்களிலிருந்து தெரிய வருகிறதே ?”

“ ஆம் நில உச்ச வரம்பு வந்தபோது. ஏராளமான எங்கள் நிலங்களை நாங்கள் விற்று விட்டோம்.”

“ அப்படியானால், நில உச்சவரம்புச் சட்டம் வரப் போகிறது என்று தெரிந்துதான், உங்கள் நிலங்களை விற்றதாகச் சொல்கிறீர்களா ?”

“ உச்சவரம்பு வரப்போவது பற்றி எல்லோருக்கும் தான் தெரியும். எல்லோரும் தங்கள் நிலங்களை விற்பனை செய்தார்கள். நாங்களும் எங்கள் நிலங்களை விற்பனை செய்தோம்.”

“1980ஆம் ஆண்டு, அ.தி.மு.க ஆட்சியில் கொண்டு வரப்பட்ட பில்லின்படி, நீங்கள் நிலங்களை விற்பனை செய்தது செல்லுபடி ஆகாமல் போய்விடுமே! ஆகவேதான், நீங்கள் உங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி, மத்திய அரசு அதற்கு இசைவு கொடுப்பதைத் தடுத்து விட்டீர்களா ?”

“ பல சிறிய நில உடைமையாளர்கள் மத்திய அரசிடம், இந்தச் சட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கக் கூடாது என்று கேட்டுக் கொண்டனர். அதனால் தான் அந்த ‘பில்’ நிறுத்தப்பட்டது. என் ஒருவரின் சௌகரியத்துக்காக கட்சி தன் கொள்கையை மாற்றிக் கொள்ள முடியுமா என்ன? (மூப்பனார் பலமாகச் சிரிக்கிறார்).”

‘என் அப்பன் குதிருக்குள் இல்லை’ என்று மூப்பனார் தைரியமாகச் சொல்கிறார். மூப்பனார்களின் வீட்டு வாசல்களில், சட்டம் கை கட்டி நிற்கின்றது!

— பொதுஜனன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# கொசு! மனிதனுக்குச் சவால் விடுகிறது!

கொசு என்ற குட்டி பயங்கரவாதி 26மில்லியன் ஆண்டுகளாக உலகில் இருக்கிறது.

பயங்கர வனவிலங்குகளை எளிதில் அழிக்கும் மனிதன் கொசுவை உலகத்தை விட்டு ஒழிக்கும் முயற்சியில் தோல்விக்குமேல் தோல்வியைச் சந்தித்து வருகிறான். டிடிடி (DDT) என்ற மருந்து வந்தவுடன், ஆண்டுக்கு மலேரியாவால் நம்நாட்டில் இறக்கும் 8 லட்சம் உயிர்களை இனிக் காப்பாற்றலாம் என நினைத்தோம். டிடிடி மருந்தால் சில காலம் ஒழிந்த கொசுக்கள், வெகு சீக்கிரம், அந்த மருந்தையும் எதிர்த்து வாழப் பழகி விட்டன. அதாவது இரவு நேரத்தில் நம் வீட்டில் வந்து ரத்த விருந்து அருந்தி விட்டு, குடியிருப்பை வீட்டுக்கு வெளியே திறமையாக மாற்றிக் கொண்டன.

*கொசுக்களில் பெண் கொசுக்கள் மட்டுமே மனிதர்களைக் கடிக்கின்றன. ஆண் கொசு யாரையும் கடிக்காது; சுத்த சைவம். செடிகளின் சாறே இதற்கு உணவு. பெண் கொசுவைக் கற்பமாக்கி, அதன் பிறகு 6 நாட்களுக்குள் இறப்பதே இதன் வேலை ஒவ்வொரு பெண் கொசுவும் ஒரு மாத வாழ்வில் 800 புதிய கொசுக்களை உருவாக்க வல்லது. 3 மீட்டர் தூரத்திலேயே, இரத்த வாடையை இதனால் மோப்பம் பிடிக்க முடியும். 360 டிகிரியில் சகல திசைகளிலும் பார்க்க முடியும் எனவே எத்திசை தாக்குதலையும் சமாளிக்க முடியும், பெண்கள், மென்மையான தோல், ஆழ்ந்த நிறங்கள், கரியமல வாயு இவை கொசுக்களுக்குப் பிடித்தமானவை. சில ஜாதிகளுக்கு அக்குள் வேர்வை என்றால் ஆசை. பெரும்பாலான வகைகள் குழந்தைகளையும், 50 வயதுக்கு மேற்பட்டவர்களையும் விரும்புவதில்லை.*

நம் அரசு மலேரியாவை ஒழிக்க தனது நலவாழ்வுத்துறை பட்ஜெட்டில் 40%ஐ அதாவது ரூ 170கோடி செலவழித்தும் 35 கோடி பேர்களுக்கு மலேரியா வரும் சாத்தியத்தைக் குறைக்க முடியவில்லை.

கொசு வளர்ச்சியை நம்பிக் கோடிக் கணக்கில் லாபமீட்டும் நிறுவனங்களில் தலையானது டல்சாரா. ஓடோமாஸ் தைலத்தின் ஆண்டு விற்பனை மட்டும் ரூ, 7 கோடி. கொசுவத்திச் சுருள் பல கோடிக்கும், புதிதாக வந்துள்ள மின்சார கொசுப்பட்டை ரூ. 20 கோடிக்கும் விற்பனையாகின்றன.

ஓர் அணு ஆயுதப்போர் வந்தால், மனித இனம் அழியுமேயொழிய கொசு இனம் தாக்குப்பிடிக்கும் என்கின்றனர் விஞ்ஞானிகள். சுற்றுப்புறங்களைத் தூய்மைப்படுத்தி, நீர் தேங்காமல் பார்த்துக் கொண்டால், கொசுவை ஒழிக்க முடியாவிட்டாலும், நிச்சயம் கட்டுப்படுத்தலாம். — இசு

FREE E - BOOKS , www.thamizham.net.,

# ப தி ல் க ள்



**பொன்னாடை போர்த்தப்பட்ட அனுபவம் உண்டா ?**

**வேய்குழல் வேந்தன் :**

*மைக்போஸ்டர்; மந்திரியின் ஆரவாரப்*
*பேச்சு*
*பத்திரிகையில் அமர்க்களமாய் படம்*
*வாழ்த்துக் கவிகள் - ஒன்றுமே*
*இல்லை,*
*மாதத்தில் ஒரு நாள்*
*சலூன்காரன் எனக்குப்*
*பொன்னாடை*
*போர்த்துகிறான்.*

**உங்கள் கவிதையை யாப்பிலக்ணக்கணம் அறிந்த இலக்கணப் புலவரிடம் காட்டியபோது நேர்ந்ததென்ன ?**

**ராஜன் :**

*இலக்கண சுத்தத்தோடே*
*எழுதணும் கவிதை என்றார்*
*கையிலே வாங்கிப் பார்த்துக்*
*கழி நெடில் விருத்தம் என்றார்*
*ஒரு வரி உரசிப் பார்த்தார்*
*கருவிளங் காய் ஈ. தென்றார்*
*மற்றொரு வரியைச் சுட்டி*
*மாற்றிந்தச் சீரை என்றார்*
*அக்கக்காய்க் கழற்றிப் போட்டார்*
*அருந்தமிழ்ப் பெயர்கள் சொன்னார்*
*கடைசியில் திரும்பிப் பார்த்தேன்*
*கவிதையைக் காணோம் அங்கே !*

**உங்கள் தலை முடி ஏன் இப்படி உதிர்கிறது ?**

**கலாப்ரியா :**

*பல்லுமிருந்து*
*பசியும் எடுப்பதால்*
*சீப்பு தினமும்*
*என் முடியைத் தின்கிறது.*

**உங்கள் பையன் எப்படி இருக்கிறான் ?**

**சி. மணி :**

*அவனைப் பள்ளியில் சேர்க்கும் மட்டும்*
*ஓயாமல் கேள்வி கேட்பான்*
*பதில் தர நான் தவிப்பேன்*
*அவனைப் பள்ளியில் சேர்த்த பின்னால்*
*ஓய்ந்தால் கேள்வி கேட்கிறேன்*
*பதில் தர அவன் தவிக்கிறான்.*

FREE E - BOOKS , www.thamizham.net.,

# நமது எளிய மருத்துவம் -2

ஆயுர்வேத சித்த மைய ஆராய்ச்சிக் கழகத்தின் வெளியீடு தரும் அதிகாரப்பூர்வமான குறிப்புகளின்படி கீழ்க்கண்டவை தரப்பட்டுள்ளன :

## இருமல்

அறிகுறிகள் : குத்திருமல், சளியுடன் கூடிய இருமல், இருமுதலால் மார்பு நோதல், லேசான காய்ச்சல்.

மருந்து : ஆடாதோடை இலை 175 கிராம் சிறுக அரிந்து, 2 லிட்டர் நீர்விட்டு, அரை லிட்டராக சுண்டக் காய்ச்சி வடிகட்டி, 175 கிராம் சர்க்கரை கூட்டிக் காய்ச்சி மணபாகு பதத்தில் எடுத்துக் கொள்ளவும், தினம் இருவேளை 1-3 தேக்கரண்டி அருந்தவும்.

## தலைவலி

அறிகுறிகள் : தலையின் முன், பின் பாகங்களில் வலி, கண் புருவத்திலும் வலி, வாய் குமட்டல், சில சமயம் வாந்தி.

மருந்து : 1. இஞ்சியைப் தாய்ப்பால் அல்லது பசும் பாலில் அரைத்துக் கொதிக்க வைத்துத் தலையில்பூசலாம்.

2. சுக்கு, இலவங்கப்பட்டை மிளகு இவற்றை வெந்நீரில் அரைத்துத் தலைக்குப் பற்றிடவும்.

## பேதி

அறிகுறிகள் : அஜீரணத்தால் அடிக்கடி மலம் நீராகப் போதல். அடி வயிற்றில் வலி, எப்போதாகிலும் வாந்தியாதல்.

மருந்து ; 1. சுக்கு 5 கிராம், மிளகு 5 கிராம் சேர்த்து 200 மி.லி நீர் சேர்த்துக் கால் பாகமாகக் காய்ச்சவும். ஒரு வேளைக்கு 50 மி. லிட்டர் வீதம் அருந்தவும். 2) சுக்கு மிளகு சம அளவு எடுத்துக் கொண்டு பொன் வறுவலாக வறுத்துப் பொடி செய்து 1 கிராம் தண்ணீரில் தினம் இரு வேளை கரைத்துக் குடிக்கவும்.

## தேமல்

அறிகுறிகள் : தோலில் நிற மாற்றத்துடன் கூடிய அரிப்பற்ற தழும்புகள் காணப்படுதல்.


மருந்து : 1. குப்பைமேனி இலை, சோற்றுப்பு இவற்றை அரைத்துப் பூசவும். 2. கஸ்தூரி மஞ்சளை இழைத்துப் பூசிக் குளித்து வரலாம்.

## பல்லீறு வீக்கம்

அறிகுறிகள்; ஈறு வீங்கின இடத்தில் சிவந்து வலிஎடுத்தல்

மருந்து : கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லி வற்றல் வகைக்கு 10 கிராம் எடுத்துச் சிதைத்து 800 மி.லிட்டர் நீர் விட்டுக் காய்ச்சி கால் பாகமாக சுண்ட வைக்கவும். இதனைத் தினம் இரு வேளை 30-60 மி லி. எடுத்து கொப்பளிக்கவும். புண்களைக் கழுவவும். 2. நல்லெண்ணெய் கொண்டும். கொப்பளிக்கலாம்.

FREE E - BOOKS , www.thamizham.net.,



# ‘சிவப்பு விளக்கின்’ சிறுவர்கள்

" ஆண்டவன் படைப்பில் யாரும் அநாதைகள் இல்லை " என்று தத்துவம் பேசிக் கொண்டிருப்பதில் எந்தப் பயனும் இல்லை. தேசம் முழுவதிலும், லட்சக்கணக்கான பிள்ளைகள் அநாதைகளாக இருக்கிறார்கள் என்பதே நடைமுறை எதார்த்தம்.

யார் இந்த அநாதைகள்? மிகப்பெரும்பாலோர், திருமணத்திற்கு முன்பே கருத்தரித்த தாய்மார்களின் பிள்ளைகள் என்பதும், விபச்சாரத்தையே தொழிலாக ஏற்றுக் கொண்டுவிட்ட பெண்களின் குழந்தைகள் என்பதும் அண்மையில் தெரிய வந்துள்ள செய்தி.

டெல்லியில் உள்ள " பாரதீய பதீத உத்தர் சபா " என்னும் அமைப்பு அண்மையில் உச்சநீதி மன்றத்தில் ஒரு வழக்குத் தொடர்ந்துள்ளது. "விலைமகளிரின் பிள்ளைகளிடம், தந்தையின் பெயர், தொழில் முதலான விவரங்களைக் கேட்கும் போக்கைக்கல்வி நிறுவனங்கள் கைவிட வேண்டும்" என்று மனுதாரராகிய, அவ்வமைப்பின் தலைவர் K. லால் போலா தன் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

பம்பாய் சிவப்பு விளக்குப் பகுதியின் விலைமகளிர் பலரும், தங்கள் பிள்ளைகளைப் படிக்க வைத்து, நாகரிகமான மனிதர்களாக அவர்களை உருவாக்கவே விரும்புகின்றனர். ஆனால் அவர்களின் பிள்ளைகளைச் சமூகம் ஓரவஞ்சகமாக ஒதுக்கியே வைக்கிறது. சிவப்பு விளக்குப் பகுதிப் பெண்களைப் பற்றி ஆராய்ச்சி செய்த, பம்பாய், நிர்மலா நிகேதன் நிறுவனத்தின் சமூக சேவகர், ப்ரீதிபாய், ‘ சிவப்பு விளக்குப் பகுதியில் உள்ள 10,000 பிள்ளைகளில் 200 பேர் மட்டுமே பள்ளிகளுக்குச் செல்கின்றனர். அந்த இரு நூறு பேரும் கூட, தீண்டத் தகாதவர்களாகவே நடத்தப்படுகின்றனர். மற்ற குழந்தைகள் திருடர்களாக, போதைப் பொருட்களைக் கடத்துபவர்களாக, தங்களின் அன்னைமாருக்கும், சகோதரிகளுக்குமே வாடிக்கைதாரர்களைத் தேடும் தரகர்களாக வளர்ந்து கொண்டுள்ளனர் " என்று கூறுகின்றார்,

அந்தப் பிள்ளைகளுக்குச் சம வாய்ப்பும், சம உரிமையும் கொடுக்காதவரை, நம்மை நாம் நாகரிகமானவர்கள் என்றோ மனித நேயம் உடையவர்கள் என்றோ சொல்லிக் கொள்ள எந்த யோக்கியதையும் அற்றவர்களே ஆவோம்.

— சுபவீ

FREE E - BOOKS , www.thamizham.net.,

# சரியான பார்வை

கெத்தே ஒரு சிறந்த ஜெர்மானியக் கவிஞர் மற்றும் தத்துவஞானி. ஒரு பல்கலைக் கழகத்தில் அவரது பிறந்த நாள் விழா நடக்கின்றது. மேடையிலே கெத்தே அமர்ந்திருக்கிறார். பேராசிரியர் ஒருவர் பேசுகின்றார்.

> "கெத்தே அவர்கள் நீண்ட நாட்கள் வாழ வேண்டும். ஆனால் அவருக்குப் பின் ஜெர்மனியில் சிறப்பாக தத்துவம் பேச, மற்றும் கவிதை எழுதயார் இருக்கிறார்கள்?"

இதே தொனியில் அவர் பேசிக் கொண்டிருக்கிறார். இந்தச் சொற்கள் எதையும் கெத்தே காதில் வாங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை. சன்னலுக்கு வெளியே எதையோ உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறார். சங்கடப்பட்ட பேராசிரியர் தனது பேச்சை நிறுத்தி விட்டு கெத்தேயைப் பார்த்துக் கேட்கிறார்.

"பெரியவரே! நான் உங்களைப் பற்றிக் கூறுவது காதில் விழுகிறதா? அப்படி என்னத்தை தான சன்னல் வழியாகப்பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?"

கெத்தே பதில் சொல்கிறார்.

> "இந்தப் பல்கலைக் கழகத்தில் உள்ள இடு காட்டினைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். இவர்கள் இல்லையென்றால் உலகம் இயங்குமா என நாம் நினைத்தவர்கள் தானே அங்கே படுத்திருக்கிறார்கள்!"

கெத்தே மெதுவாகச் சிரிக்கிறார்.

— ஜி. வில்சன் அமல்ராஜ்


## சுட்டி வாசகர் இயக்கம்

சுட்டியின் சமூகப் பார்வையில் நம்பிக்கையுடையோர் - சுட்டியை மேலும் முன்னோக்கி எடுத்துச் செல்லும் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வோர் சுட்டி வாசகர் இயக்கத்தில் சேர அழைக்கிறோம். விவரங்களுக்கு எழுதவும்: சுட்டி வாசகர் இயக்கம், AP-638, அண்ணாநகர், சென்னை-600 040


FREE E - BOOKS , www.thamizham.net.,

# பரதன் அன்று கெடுத்தது

காட்சி 1

எம்.எல்.ஏ சபா ரெத்தினம் வீடு. மதியம் 12 மணி

பண்ணையார் பழநி: என்ன சபா, அந்த டெண்டரு நமக்கு வந்துருமில்ல. எவ்வளவு லாபம் கொழிக்கும் தெரியுமா. கணக்குப் போட்டுப்பாத்தா தலை சுத்துது. ஆமா! மேலிடத்துல சொல்லி வச்சிட்டில்ல.

சபா : எந்த டெண்டரைச் சொல்லுறீங்க பண்ணையார்?

பண்ணை : அட அதைத்தான்யா! இந்த ஏழைங்களுக்கு இலவசமா செருப்புக் கொடுக்குதில்ல அரசாங்கம். அந்த டெண்டர் தான்யா.

சபா : ஏனுங்க அதைப் போயி மறப்பனா? எல்லாம் செட் பண்ணியாச்சு. தைரியமா போங்க. டெண்டர் நமக்குத்தான்.

காட்சி-2 அதே இடம். மதியம் மணி 2-00

தெரு வாசலில் நிழலாடுகிறது. படித்துக் கொண்டிருக்கும் சபா தலை நிமிர்ந்து பார்க்கிறார். பண்ணையார் வீட்டு வேலையாள் முனுசாமி. தலையில் கட்டியிருந்த துண்டை எடுத்து அக்குளில் வைத்துக் கொண்டு கும்பிடு போட்டான்.

சபா ; என்ன முனியா! இந்த வேகாத வெய்யிலில் 3 மைல் ஓடியாந்திருக்கியே என்ன?

முனியன் ; [வாசலில் தரையின் சூடு தாங்காமல் கால் மாற்றி நின்று கொண்டே] நம்ம ஐயா அவசரமா காருல கௌம்புனதுனால செருப்புப் போட்டுக்கிட்டுப் போக மறந்துட்டாங்களாம். இங்கேயே கெடக்காம், அதை எசமாங்கிட்டே சொல்லிப்புட்டு எடுத்துக்கிட்டு வரச் சொன்னாங்க

சபா : சரி சரி எடுத்துக்கிட்டு சீக்கிரமா போ

(தான் வெய்யிலுக்காகத் தலையில் போட்டுக் கொண்டு வந்திருந்த துண்டை, எடுத்து, விரித்து அதில் ஐயாவின் செருப்புகளை மரியாதையாக வைத்துச் சுற்றி, தனது அக்குளில் வைத்துக் கொண்டு திரும்பவும் 3 மைல் நடக்கலானான் முனியன்.)

— ஸ்டெத்

ஆசிரியர் : கு. நாராயணபாரதி, வெளியிடுபவர் : கி. இராமச்சந்திரன், அச்சிடுபவர்: எம்.எஸ். ரவீந்திரன், ரவீந்திரன் பிரஸ் 137, டாக்டர் நடேசன் ரோடு, சென்னை — 600 005. முகவரி 1494, அண்ணாநகர். சென்னை—600 040.

FREE E - BOOKS , www.thamizham.net.,

புத்தகப் பிழிவு

# இலங்கை இனப்பிரச்சினையும் இந்துமகா சமுத்திரமும்

(உதயன்' விஜயன்-ரேர்சா லக்சம்பர்க் படிப்பு வட்டம் M23/10 முத்தாலம்மன் கோயில் தெரு, சென்னை-33 மார்ச் 1988 (இரண்டாம் பதிப்பு) 16 + 146 + 20 பக்-சமூக-அறிவியல் விலை-ரூ. 15)

புவிசார் அரசியலை (Geo - Politics) அடிப்படையாகக் கொண்டு தமிழில் வெளிவந்துள்ள மிகக் குறைவான நூல்களில் இதுவும் ஒன்று.

இந்நூலில் மொத்தம் ஒன்பது இயல்கள் உள்ளன. "சர்வதேச உறவு-ஓர்-அறிமுகம் என்னும் முதல் இயல், "நாம் ஓர் அரசுக்குள் மட்டும் வாழ்ந்து கொண்டிருக்கவில்லை, அரசுகள் என்னும் அமைப்புக்குள்ளும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்" என்னும் வரிகளோடு தொடங்குகின்றது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்பு, சித்தாந்த ரீதியில் அமெரிக்காவின் தலைமையில் வலதுசாரி நாடுகளும், ரஷ்யாவின் தலைமையில் இடதுசாரி நாடுகளும் இணைந்து முறையே நேட்டோ (NATO) அணியும், வார்சோ (Warsaw) அணியும் உருவான வரலாறு கூறப்பட்டுள்ளது. பிறகு 1959-ஆம் ஆண்டு குருஷ்சேவ் - மாவோ இடையே ஏற்பட்ட விரிசல் காரணமாக மேற்கூறிய அணிகள் பிரிந்து கொள்கை அடிப்படையில் நாடுகள் அணிசேர்ந்த விதமும் சிக்கலான இன்றைய சர்வதேச உறவுகளும் விரிவாக விளக்கப் பெற்றுள்ளன.

அடுத்த மூன்று இயல்களில் இந்து மகாசமுத்திரத்தில் உலக நாடுகளும். இந்திய இலங்கை நாடுகளும் காட்டும் அக்கறைக்கு காரணங்கள் விளக்கப் பெற்றுள்ளன இந்தியாவிற்கும், இலங்கைக்கும் 1947 முதல் இன்றுவரை ஏற்பட்டுள்ள எல்லா ஒப்பந்தங்களைப் பற்றியும் தகவல் தருகிறது ஐந்தாவது இயல்.

ஆறு முதல் ஒன்பது வரை உள்ள இயல்களில் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாறு, அதில் இந்தியாவின் பங்கு'முதலியவை ஆராயப்பட்டுள்ளன. ராஜீவ் - ஜெயவர்த்தனா ஒப்பந்தம் பற்றியும் நடுநிலையான ஓர் ஆய்வு இடம் பெற்றுள்ளது.

29—7—1988 அன்று ஏற்பட்ட ஒப்பந்தத்தின் முழுவிவரமும், இந்தியா, இலங்கை, தென்னாசிய நாடுகளின் வரைபடமும் பின்னிணைப்பாக உள்ளன. படித்துப் பயன் பெற வேண்டிய நூல் இது!

— மது

FREE E - BOOKS , www.thamizham.net.,

தூசித் தட்டி வாசித்தவை :

# வெடிகுண்டுகளும் காங்கிரஸ் கட்சியும்

1929 ஆம் வருடம் இர்வின் பிரபுவும் அவர் மனைவியும் பயணம் செய்த ரயிலுக்குச் சிலர் வெடிகுண்டு வைத்து விட்டனர். அது வைஸ்ராயும், அவரைச் சேர்ந்தவர்களும் மட்டும் பயணம் செய்த விசேஷ ரயில். பொது மக்கள் யாரும் அந்த ரயிலில் இல்லை.

ரயில் குறிப்பிட்ட இடத்தைக் கடந்ததற்குப் பின், வெடி குண்டு தாமதமாக வெடித்ததால், இர்வினும் மற்றவர்களும் தப்பிவிட்டனர். விபத்திலிருந்து தப்பி விட்டவர்களுக்குப் பாராட்டுத் தெரிவித்தும், வெடிகுண்டு வைத்தவர்களைக் கடுமையாகக் கண்டித்தும், 29-31.12 1929 தேதிகளில், லாகூரில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சியின் 44-ஆம் மாநாட்டில் ஒரு தீர்மானத்தைக் காந்தியார் முன் மொழிந்தார், அத்தீர்மானத்தை எதிர்த்தும், ஆதரித்தும் குரல்கள் எழுந்தன.

டாண்டன் என்பவர் பேசுகையில் 'ஆயுதங்களால் நம்மை வென்று, ஆயுதங்களைக் காட்டி நம்மை அடக்கி வைத்திருக்கும் வெள்ளையரை நோக்கி, நம் இளைஞர்களும் ஆயுதம் எடுப்பதை நாம் ஏன் கண்டிக்க வேண்டும், என்று கேட்டார். சுவாமி கோவிந்தானந்தாவும் தீர்மானத்தை எதிர்த்துப் பேசினார். இறுதியாகப் பேசிய டாக்டர் ஆலத்தின் வாதம் வேறு கோணத்தில் அமைந்திருந்தது, " நமக்கு உடன்பாடோ இல்லையோ அதை நாம் கண்டிப்பதன் மூலம் அரசாங்கத்தின் கைகளை வலுப்படுத்துகிறோம், விசாரணை என்னும் பெயரில் அப்பாவி இளைஞர்கள் பலரை அரசாங்கம் சித்திரவதை செய்ய நாம் துணை போகிறோம். ஆகவே இத்தீர்மானம் முறையற்றதும், கேடு விளைவிக்கக் கூடியதும் ஆகும்" என்று அவர் வாதிட்டார்.

இறுதியில் அத்தீர்மானம் ஒட்டுக்கு விடப்பட்டது. 1713 பிரதிநிதிகள் வாக்களித்தனர். மிகக் குறைந்த வாக்கு வித்தியாசத்தில் (897 ஆதரவு. 816 எதிர்ப்பு) தீர்மானம் நிறைவேறியது.

காந்தி வாழ்ந்த அந்தக் காலத்திலேயே, காங்கிரஸ் கட்சி அப்படியொன்றும் அகிம்சைக் கட்சியாகத் தெரியவில்லையே !

(ஆதாரம் : The Indian Annual Register, July-Dec 1929)

— சுபவீ

FREE E - BOOKS , www.thamizham.net.,

தமிழ்த் திரைப்படங்கள் :

# தனி மனித வழிபாடு

— வசந்தா

ஆளுயர லித்தோ போஸ்டர், அறுபதடி உயர 'கட் அவுட்', கட் அவுட்டைச் சுற்றி வண்ண விளக்குகள்-இப்படி நம் தமிழ்நாட்டு அரசியலும், சினிமாவும் வெற்று விளம்பரக் கலாசாரத்தில் மூழ்கிக் கிடக்கின்றன. வெளிநாடுகளில் மட்டுமல்ல, இந்தியாவின் வேறு மாநிலங்களில் கூட இந்தக் கலாச்சாரச் சீரழிவு இந்த அளவிற்கு இல்லை என்றே கூறுகின்றனர்.

அன்று — எம். ஜி. ஆர்., சிவாஜிகணேசன் ! இன்றோ ரஜினிகாந்த், கமலஹாசன், விஜயகாந்த்! ஆட்கள் மாறியிருக்கிறார்களே தவிர, அடிப்படை விஷயம் மாறவில்லை.

இவ்விளம்பரங்களுக்காக லட்சக்கணக்கில் ஆகும் செலவைக் காட்டிலும் இன்னொரு விஷயம் ஆபத்தானது. ஒரு தனி மனிதனின் பெயரும், உருவமும் பெரிய பெரிய அளவுகளில் விளம்பரப்படுத்தப்படுவதன் மூலம் தனி மனிதரின் புகழ் வானளாவ உயர்த்தப்பட்டு, வெகுஜனங்களின் (Mass) ஆற்றல் பாதாளத்துக்குத்தள்ளப்படுகிறது. ஒருசிலரே உயர்ந்தவர்கள், அவர்களால் மட்டுமே அரிய சாதனைகளைப் படைக்க முடியும் என்றும், தாங்கள் எல்லாம் மிகவும் சாதாரணமானவர்கள் என்றும் மக்கள் எண்ணத் தொடங்குகின்றனர். அவநம்பிக்கை மக்கள் மனங்களில் திட்டமிட்டுவிதைக்கப்படுகிறது சமூக மாற்றங்களுக்கு வெகு மக்களின் எழுச்சியே காரணம் என்பது மறைக்கப்பட்டு, தனி மனிதர்களே சமூக மாற்றத்தை உருவாக்குகின்றனர் என்னும் தவறான எண்ணம் பரப்பப்படுகிறது. ஒட்டு மொத்தமாய் மக்களின் சிந்தனைத் திறன் மழுங்கடிக்கப்படுகிறது.

திரைப்படங்களில் இடம்பெறும் ஆபாசம், வன்முறை ஆகியவைகளைக் காட்டிலும் கூட அமைதியாய்இருந்து கொண்டு, சமூகத்திற்குப் பேராபத்தை ஏற்படுத்தக் கூடியது, இத்தகைய தனி மனித வழிபாடுதான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

(அடுத்த இதழில் : 'கனவுக் காட்சிகள்')

FREE E - BOOKS , www.thamizham.net.,

# வாசகர் எதிரொலி

❁ அட்டைப்படத்தில் ராக்கெட் விடும் முயற்சியைக் கேலி செய்திருப்பது சரிஅல்ல ஒரு கிராமபோன் ரிகார்டு உருவாக்குவதற்கு எடிசன் 5000 ரெக்கார்டுகள் செய்து தோல்வி அடைந்ததாகச் சொல்வார்கள். இது வீண் செலவு என்றால் சில ஆண்டுகளில் மற்ற நாட்டினர் நிலவில் குடியேறும் போது நாம் 'நிலா நிலா ஓடிவா' என்று பாட வேண்டியதுதான். — ஜி. வில்சன், திருப்பத்தூர்

❁ ம. பொ. சி. பற்றிய கட்டுரை அருமை. எப்படியாவது பதவியில் இருக்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோளையே கொள்கையாகக் கொண்ட தமிழறிஞர்கள் நம் நாட்டில் மிகுந்து இருக்கிறார்கள் என்ற உண்மைமையை வெளிப்படுத்திய விதம் பாராட்டுதலுக்குரியது. மு. மொய்தீன், திருச்சி-20

❁ பதில்கள் பகுதியில் பூரி சங்கராச்சாரியாரின் வார்த்தைகள் யாரோ மனதில் திராவகத்தைக் கொட்டியது போல இருந்தது....சே...இன்னும் இந்நாட்டில் மனிதன் அஃறிணையாகவே இருக்கிறான்.

கவிஞர் சுகன், தஞ்சாவூர்-1.

❁ ஒரு நீக்ரோ சிறுவனின் நெஞ்சைத் தொடுகின்ற 'கருப்புப்பலூன்' சிறுகதைக்கு அடுத்த பக்கத்திலேயே இனவெறியால் கண்மூடித்தனமான நம்பிக்கைகளைக் கொண்டிருக்கும் நம் சிந்தனையாளர்'களின் சீழ் சொட்டும் பேச்சை படித்தபோது மனம் கனத்துப் போனது எம். சம்பத், வேலாயுதம்பாளையம்

❁ "போராட்டங்களும் பொதுமக்களும்" எனும் தலைப்பில் ஆசிரியர்கள் தங்கள் போராட்டத்தின் மூலம் சாதாரண பொதுமக்களும் விழித்தெழுந்து போராடி முன்னேற்றம் பெற வழி காட்டியிருக்கிறார்கள் என்பதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறீர்கள். பாராட்டும் நன்றியும். மு. செல்வநாதன், சோளிங்கர்

❁ 'பிரிவுதான் உறவுக்கு உரமாகும்' என்கிற வித்தையை 44 ஆண்டுகளுக்கு முந்திய கடிதம் நன்றாகவே எடுத்துக்காட்டியது.

கவிஞர் கோழியூர் சிங்காரபாலன், மோட்டாம்பட்டி

❁ 'மலட்டுக் கண்ணீர்' சிறு கதை எந்த அரசியல்வாதியின் கண்ணில் பட்டாலும் அவர் கண்ணீர் விடுவார் என்று நினைக்கிறீரா ?

அன்புராஜ், சோழபுரம்

❁ வாக்காளர்களிடம் 4 கேள்விகள் நல்ல கேள்விகள் என்ற போதும் கல்வியறிவு முழுமையாகப் போய் பொதுமக்களை அடையாதவரை வாக்காளர்களைக் குறை கூறிப் பிரயோசனம் இல்லை.

ஆர். பரமேஸ்வரன், பசாய், மராட்டியம்

FREE E - BOOKS , www.thamizham.net.,

சுட்டி, மாத இதழ் : பதிவு எண் : TN/MS(N) 317.

# " சுட்டி "
# குறுநாடகப் போட்டி

முதல் பரிசு : ரூ. 100
இரண்டாம் பரிசு : ரூ. 25

தேர்ந்தெடுத்து வெளியிடப்படும் அனைத்து நாடகங்களுக்கும் இரண்டாம் பரிசு உண்டு

சுட்டி
வாசகர்
91

விதிகள் : 0 குறுநாடகம் சுட்டியின் ஒருபக்க அளவுக்குள் அமைதல் வேண்டும். (எடுத்துக்காட்டு : இவ்விதழில் வெளி வந்துள்ள 'பரதன் அன்று கெடுத்தது' என்ற நாடகம்)

0 இப்போட்டி சுட்டி வாசகர்களுக்கு மட்டுமே. எனவே பக்கத்தில் உள்ள 'சுட்டி வாசகர்' கட்டத்தை வெட்டியிணைத்து அனுப்புதல் அவசியம்.

0 ஒருவர் எத்தனை நாடகங்களும் அனுப்பலாம். ஒவ்வொரு நாடகத்துடனும் வெட்டி ணைப்பு அவசியம்.

0 எமக்குக் கிடைக்க வேண்டிய இறுதி நாள் 30-9-1988.

0 போட்டி முடிவு 1-11-88 இதழில் வெளியாகும்.

0 உறைமேல் குறுநாடகப் போட்டி எனக் குறிப்பிடுங்கள்.

**சுட்டி**

தொடர்பு முகவரி : AP 638, 'H' பிளாக்,
அண்ணாநகர், சென்னை-600 040.
ஆண்டுச் சந்தா: ரூ 10, ஆயுள் சந்தா: ரூ. 150

http://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
தமிழ்க்களம்

FREE E - BOOKS , www.thamizham.net.,